04.எக்காளம் முழங்கிட (வாழ்த்துப் பாடல்)
இயல்: ஜான் ரொசாரியோ
இசை: ஜெரோன்
பாடியவர்: விமல்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

எக்காளம் முழங்கிட உற்சாகம் பெருகிட
ஓர் விடியல் பிறக்கின்றது
கல்லறை திறந்திட பேரொளி படர்ந்திட
புதிய நாள் மலர்கின்றது
மாண்டவர் உயிர்த்தெழுந்தார் வாழ்த்திசை பாடிடுவோம்
மரணத்தை வென்றுவிட்டார் அவர் நாமம் போற்றிடுவோம்

அனுபல்லவி

இனியில்லை மனதினில் இருளின் ஆட்சியே
இதயத்தில் நிறையட்டும் ஒளியின் மாட்சியே

சரணம்

1. நேர்மையின் பாதையில் இணைந்து நாம் நடப்போம்
   தீமைகள் மறைந்திட புதுயுகம் படைப்போம்
   புதிய ஜனனம் இனிய தருணம்
   ஆண்டவர் உயிர்ப்பினில்
   இனியென்றும் தளிர்க்கட்டுமே

2. பாவத்தின் பிடியினில் வாழ்ந்தது போதும்
   தியாகத்தின் அணைப்பினில் மனங்களை சேர்ப்போம்
   உடைந்த உள்ளம் நிறைந்து வழியும்
   உன்னதர் கரங்களின்
   சுகம் தரும் அணைப்பினிலே.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Easter 2022)**